மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

15.11.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com


## இலங்கை - இந்திய பயணிகள் கப்பல் சேவை விரைவில்

இலங்கை – இந்திய பயணிகள் கப்பல் சேவையும் விரைவில் ஆரம்பிப்பதற்குரிய பேச்சு வார்த்தைகள் இந்திய அரசுடன் இடம் பெற்று வருகின்றதாக துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜெயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு இன்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்டு, காங்கேசன்துறை துறை முகத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்தரிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கை இந்தியாவுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வருகின்றன.அந்த பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விரைவில் கப்பல் சேவையினை ஆரம்பிக்க கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன.

## 8 பில்லியனை கடந்த உலக சனத்தொகை

7 பில்லியனை கடந்து 11 ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறு உலக சனத் தொகை 8 பில்லியனை கடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உலகின் அதி கூடிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இந்தியா முன்னிலை பெரும் எனவும் இதுவரை காலமும் சீனா வகித்து வந்த இடத்தை இந்தியா பிடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 1950 ஆம் ஆண்டின் பின்னர் முதல் தடவையாக கடந்த 2020 ஆம் ஆண்டில் உலக மொத்த சனத்தொகை வளர்ச்சி வீதம் ஒரு வீதத்திலும் குறைவாக காணப்பட்டுள்ளது. எதிர்வரும் 2030 ஆம் ஆண்டளவில் உலகின் மொத்த சனத்தொகை 8.5 பில்லியன்களாக உயர்வடையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தியின் குடும்பத்திற்கு 9 மில்லியன் ரூபா

**(சில்மியா யூசுப்)**

கடந்த மே மாதம் இலங்கையில் இடம்பெற்ற பொது அமைதியின்மையின் போது கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவுக்காக தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களால் 09 மில்லியன் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (14) மறைந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரின் மனைவியிடம் நன்கொடையை கையளித்தார். நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சி எம்.பி.க்கள் கூட்டத்தின் போதே பண காசோலையை கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர். ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் தகவலின்படி மொத்தம் 183 பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கொடைக்கு பங்களித்துள்ளனர் என தெரிவக்கப்பட்டுள்ளது.

## நாடு திரும்புகிறார் பசில்

**(சில்மியா யூசுப்)**

அமெரிக்காவிலிருந்து பசில் ராஜபக்ச எதிர்வரும் 20ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கடும் நெருக்கடியை எதிர்நோக்கி வரும் இந்த தருணத்தில், வீழ்ச்சியடைந்துள்ள கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக பசில் ராஜபக்ஷ திடீரென இலங்கைக்கு வர தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானங்களுக்கு புறம்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளதுடன், உள்ளூராட்சி மன்ற தேர்தலை அறிவிக்கும் வாய்ப்பும் உள்ளநிலையில். பசில் நாடு திரும்பவுள்ளார். அமெரிக்காவில் தங்கியிருந்த காலப்பகுதியில் ஜனாதிபதியுடன் அவ்வப்போது செய்திகளை பரிமாறிக்கொண்ட திரு.பசில் ராஜபக்ஷ, அமைச்சரவை மாற்றம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்து ஜனாதிபதியுடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றதுஇ

## தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை



இன்று(15) தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தின.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துமாறு கோரி கடிதம் ஒன்றையும் இக்குழுவினர் கையளித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இப்பிரதிநிதிகள் குழுவினர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இவ்வாறு சமூகமளித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் அடங்களாக மொத்தம் பதினாறு தரப்புகள்

## சந்திரிக்காவுடன் இரகசிய சந்திப்பினை மேற்கொண்ட அமைச்சர்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்க அமைச்சர்கள் குழுவொன்று, கட்சியின் ஆதரவாளரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடியதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட்ட இந்த கலந்துரையாடல் கொழும்பு டொரிங்டனில் உள்ள திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. கட்சித் தலைவர் மீது பல விமர்சனங்கள் உள்ளதால், கட்சியின் முன்னேற்றம் ஆபத்தான நிலையில் உள்ளதாக இந்தக் குழு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, சாமர சம்பத் திஸாநாயக்க, சுரேன் ராகவன், ஜகத் புஷ்பகுமார, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட அமைச்சர்கள் குழு இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ‘கஞ்சா சாப்பிட்டு சாகலாம்’ இதுவே நோக்கம் என்கின்றார் பொன்சேகா



கஞ்சாவை ஏற்றுமதி செய்வது மட்டுமல்லாமல் மக்களை கஞ்சாவிற்கு அடிமையாக்கவே அரசாங்க முயற்சி செய்கின்றது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார். கஞ்சாவை ஏற்றுமதி செய்வது குறித்து ஆராய நிபுணர்களு குழு நியமிக்கப்படும் என 2023 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட உரையில் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த அறிவிப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, மக்களை போதையில் இருக்கச் செய்து விட்டு போராட்டம் இடம்பெறுவதை தடுப்பதே நோக்கம் என்றார். கஞ்சாவை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக, அதை உட்கொண்டு இறக்கும்படி மக்களை வலியுறுத்தும் செயற்பாடே இதுவென சரத் பொன்சேகா குற்றம் சாட்டினார்.







# இராஜேந்திரசோழன் பொலனறுவையில் நிறுவிய ஏழு சிவனாலயங்கள்

## அன்று நிருவாக மொழியாக தமிழ்





இலங்கையில் 77 ஆண்டுகள் சோழராட்சி நிலவியது. அதில் இராஜேந்திரசோழன் பொலனறுவையில் ஏழு சிவனாலயங்களை நிறுவினான்.இன்றும் அதன் எச்சங்கள் பொலன்னறுவையில் காணப்படுகின்றன. அன்று இலங்கை முழுவதும் நிருவாக மொழியாக தமிழ் மொழியே இருந்தது. நம்புவீர்களா? ஆனால் அதுதான் உண்மை. வரலாற்றை நோக்குகின்ற போது பத்தாம் நூற்றாண்டில் இறுதிக் காலத்தில் இந்தியாவில் இருந்து படையெடுத்த இராஜராஜ சோழன் இலங்கை தலைநகராக இருந்திருந்த அனுராதபுரத்தை கைப்பற்றி ஆட்சி செலுத்தினான்.

பின்னர் போரில் அனுராதபுரம் வீழ்ச்சியுற தெற்கே உள்ள பொலனறுவையை கைப்பற்றி தலைநகரமாக்கினான். 1007 காலப் பகுதியில் இராஜராஜ சோழனின் மகனான இராஜேந்திர சோழன் இலங்கையை கைப்பற்றி முழு இலங்கையையும் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான்.

அக் காலத்தில் ராஜேந்திர சோழன் அங்கு ஏழு சிவன் ஆலயங்களை உருவாக்கினான்.

அது மாத்திரம் அல்ல இலங்கையின் பல பாவங்களிலும் ஆலயங்களை அமைத்ததில் ராஜேந்திர சோழனுக்கு பெரும் பங்கு இருக்கின்றது. 1070 ஆண்டு வரை ராஜேந்திர சோழன் அதனை சிறப்பாக பராமரித்து வந்தான். இலங்கையில் 77 ஆண்டுகள் சோழர் ஆட்சி காலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் போது இலங்கையில் நிர்வாக மொழியாக தமிழ் மொழி இருந்ததும் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. இன்றும் அந்த ஆலயங்களின் எச்சங்கள் பொலன்னறுவை நகரில் காணப்படுகிறது.

கடந்த வாரம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் அங்கு சென்ற பொழுது அதனை காண முடிந்தது. அதன் சில பாகங்களை இங்கு நீங்கள் காணலாம். சோழர்கள் ஆட்சிகாலத்தில் "ஜனநாதமங்கலம் " என பொலனறுவை அழைக்கப்பட்டது. அந்தளவிற்கு இலங்கையில் சைவசமயம் மேலோங்கி இருந்தது.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**






# அரசியலமைப்பு சபைக்கான விண்ணப்பங்களுக்கு 21 ஆவது திருத்தத்தில் இடமில்லை

அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூக உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை கோருவது அரசியலமைப்பின் 21வது திருத்தத்திற்கு உற்பட்டது அல்ல என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புச் சபைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாத உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அண்மையில் நாடாளுமன்றம் தெரிவித்தது.

அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்காக, எந்தவொரு அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்காத, பொது அல்லது தொழில் வாழ்க்கையில் தனித்துவம் மிக்க மற்றும் நேர்மையான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 21 வது திருத்தம் அத்தகைய நியமனங்களை அனுமதிக்காது என்றும், அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூக உறுப்பினர்களை நியமிப்பது சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரால் செய்யப்பட வேண்டும் என்றும் நீதி அமைச்சர் கூறினார்.

# 40 மாணவிகள் வைத்தியசாலையில் அனுமதி

மாத்தளையில் உள்ள பெண்கள் கல்லூரி ஒன்றைச் சேர்ந்த சுமார் 40 மாணவிகள் திடீர் சுகயீனமுற்று மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்று (செவ்வாய்க்கிழமை) திடீர் சுகயீனமுற்று மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த மாணவிகளுக்கு காய்ச்சல், வாந்தி, தலைவலி போன்ற அறிகுறிகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை 14ஆம் திகதி இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் இம் மாணவிகள் பங்குபற்றிதாகவவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தில் நாட்டில் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்

எதிர்காலத்தில் நாட்டில் பால் மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என பியோடேல் பால் நிறுவனத்தின் தலைவர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுகத்தில் 25 நாட்களாக 15 கொள்கலன்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் எவ்வித தீர்மானமும் எடுக்க மாட்டார் எனவும் தலைவர் குறிப்பிட்டார்.

"வெளிநாட்டில் இருந்து எங்களுக்கு பால் பவுடர் சப்ளை செய்த ஏஜென்சிகள், இந்தப் பாலை வியட்நாம் மற்றும் இந்தோனேஷியாவுக்கு மீண்டும் அனுப்பச் சொல்கிறார்கள். அப்போது என்ன நடக்கும், நாட்டில் பால் பற்றாக்குறை ஏற்படும். 40 லட்சத்துக்கு மேல் டெமாரேஜ் கொடுக்க வேண்டும்," என்றார்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

Since 2014

# அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

25300 | வேள | 1975
யாழ்ப்பாணம் | இந்து
Germany | Manager
Diploma | அத்தம் (கன்னி)
179 செ.மீ

25273 | சோ | 1988
மாதகல் | இந்து | Canada
Tech Account Manager
சித்திரை (துலாம்) Degree
170செ.மீ | செவ்: 04

24448 | வேள | 1992
ஓமந்தை | இந்து Sri Lanka
Tech Writer | B.eng
சதயம் (கும்பம்)
190 செ.மீ

25272 | வேள | 1976
யாழ்ப்பாணம் | இந்து | Switz
Volunteer Teacher
அஸ்வினி (மேஷம்)
172 செ.மீ | செவ்: 01

25299 | வேள | 1997
வேலணை | Newzland
Admin Staff | B.eng
ஆயிலியம் (கடகம்)
159 செ.மீ | சு +செவ்: 04

25274 | வேள | 1994
யாழ்நகர் | இந்து
Business | A/L
உத்தராடம் (மகரம்)
157 செ.மீ

25254 | வேள | 1978
மட்டக்களப்பு | Australia
Forklift Driver | Diploma
அஸ்வினி (மேஷம்)
172 செ.மீ

25264 | வேள | 1989
திருகோணமலை | இந்து
Senior Software Engineer
Bsc | அத்தம் (கன்னி)
172 செ.மீ | சு + செவ்: 02

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

23341 | அ | 1959
கம்பஹா | இந்து | Sri Lanka
Asst Accountant
Non RC | A/L
166 செ.மீ

25293 | வேள | 1994
முல்லைத்தீவு | Venezuela
Development officer
Degree | மூலம் (தனுசு)
150 செ.மீ | சு + செவ்: 08

25303 | வேள | 1998
புத்தளமுல்லை | Sri Lanka
Vocational Course
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ | செவ்: 02

24199 | வேள | 1990
நல்லூர் | இந்து | MBA
Junior Excutive Asst
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | செவ்: 07

25262 | வேள | 1996
கொண்டாவில் | இந்து | SL
Asst Project Manager
Bsc | மகம் (சிம்மம்)
157 செ.மீ | செவ்: 07

24283 | வேள | 1994
நெல்லியடி | இந்து | Divorced
Graduate Teacher
Bsc | ரேவதி (மீனம்)
160 செ.மீ | செவ்: 12

25284 | வேள | 1991
அல்வாய் | இந்து | Sri Lanka
Doctor | MBBS
பூரம் (சிம்மம்)
165 செ.மீ

23328 | வேள | 1994
உரும்பிராய் | இந்து | SL
Lecturer
Bsc | மூலம் (தனுசு)
152 செ.மீ

since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
வழங்கும்

# வரன் தேடுவோம் வாருங்கள்

ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு மண-மக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

## யாழ்ப்பாணம்
செல்வமஹால் 20-11-2022

## கொழும்பு
தமிழ்ச்சங்கம் 27-11-2022

இந்தியாவிலிருந்து
# பிரபல ஜோதிடர்
## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில், உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு

நவம்பர் 20, 21, 22
யாழ்ப்பாணத்திலும்

நவம்பர் 24, 25, 26, 27
கொழும்பிலும்



முன்பதிவு செய்ய அழையுங்கள்
074 172 4524

அருந்ததி பிரைவட் லிமிட் | +94 777 164 524
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய 2022 ஆண்டிற்கான வருடாந்த அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை



**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2022 ஆண்டிற்கான அணிவகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை இன்று கல்முனை உவெஸ்லி பாடசாலை மைதானம் மற்றும் பொலிஸ் நிலையத்தில் இன்று இடம்பெற்றது. இந்நிகழ்வானது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயந்த ரத்னாயக்க கலந்து கொண்டு அணிவகுப்பில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக் கொண்டார்.

மேலும் பொலிசாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவை பிரிவு நிலையங்கள் சுற்று சூழல் பொலிஸ்உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகளை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார். மேலும் இந்நிகழ்வில் சவளக்கடை, சம்மாந்துறை ,பெரியநீலாவணை, காரைதீவு, சாய்ந்தமருது, பொலிஸ் நிலைய பொலிஸாரும் இணைந்திருந்தமை குறிப்படத்தக்கது.

# சேதனப்பசளை, நாற்று வகைகள் வழங்கி வைப்பு




**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் சேதனப்பசளை மற்றும் நாற்று வகைகள் வழங்கும் நிகழ்வு (14) இடம்பெற்றது. ரம்யலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் தியாவட்டவான் கிராம சேவை பிரிவிலுள்ள 100 பயனாளிகளுக்கு பசளைகளும், நாற்று வகைகளும் வழங்கி வைக்கப்பட்டன. பிரதேச செயலாளர் எஸ்.எச்.எம்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ரம்ய லங்கா நிறுவனத்தின் பிரதிநிதி அஷ்ஷெய்க் எம்.முஸ்தபா (மொழி பெயர்ப்பாளர்), 210 சி, கிராம சேவை பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், மயிலங்கரச்சை பௌத்த விகாரையின் விகாராதிபதி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பயிர் விதைகள் மற்றும் சேதனப்பசளைகளையும் வழங்கி வைத்தனர்.

# மன்னாரில் மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்ட செயலகமும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவையும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரனையில் 'மன்னெழில் –11' மலர் வெளியீடும் 2022ம் ஆண்டுக்கான கலைஞர் கௌரவிப்பும் நடாத்துகின்றது. மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் 16.11.2022 அன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் மன்னார் மாவட்ட கலை , பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான திருவாட்டி அ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெறுகின்றது.

இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண கல்வி , பண்பாட்டலுவல்கள் , விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு.இ.வரதீஸ்வரன் கலந்து கொள்கின்றார். அத்துடன் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருவாட்டி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா மற்றும் கௌரவ விருந்தினராக வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருவாட்டி லிங்கேஸ்வரி துணைவன் ஆகியோரும் கலந்து கொள்ளுகின்றனர்.

இவ் நிகழ்வானது அமரர் பீ.ஏ.அந்தோனி மார்க் அரங்கில் மலர் வெளியீடு , நடனங்கள் , 'கம்பனில் பெண்மை' சிறப்புரை , 'மன்கலைச்சுரபி' , 'மன்கலைத்தென்றல்' மற்றும் 'மன்இளம் கலைச்சுரபி' ஆகிய விருதுகளும் வழங்கும் நிகழ்வுகளும் இவ் அரங்கில் இடம்பெறுகின்றது. இவற்றிற்கான நிகழ்சிக்கான தொகுப்புக்களை மன்னார் சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் திரு. இ. நித்தியானந்தன் மற்றும் எஸ்.சதீஸ் ஆகியோர் மேற்கொள்ளுகின்றனர்.

# திருகோணமலையில் "உள்ளக்கிடங்கு" சிறுகதைநூல் வெளியீடும் அறிமுகமும்




**(அ . அச்சுதன்)**

தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தைச் சேர்ந்த மாறெட்டுவ பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டில் பயிலும் மாணவியான ஆர்த்திகா சுவேந்திரனின் "உள்ளக்கிடங்கு" சிறுகதை தொகுதியானது திருகோணமலை "அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின்" ஏற்பாட்டில் இலட்சுமி பிரசுரத்துடன் இணைந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் (20.11.2022) வெளியீடு மற்றும் அறிமுகமானது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வானது எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இந்நிகழ்விற்கு முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்சன் கலந்து சிறப்பிப்பதோடு, சிறப்பு அழைப்பாளர்களாக கவிஞர் . மூதூர் முகைதீன் மற்றும் சட்டத்தரணி செல்வி ஐஸ்வர்யா சிவகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்விற்கு எழுத்தாளர்கள் , கவிஞர்கள் , கலை இலக்கிய ஆர்வலர்களை கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றிய விசேஷமான சபை அமர்வு



**( காரைதீவு நிருபர் சகா)**

தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சபை உறுப்பினர்களின் மனைவிமார் பிள்ளைகள் குடும்பத்தினர் முதன் முதலில் பங்குபற்றிய அமர்வு காரைதீவு பிரதேச சபையில் நேற்று(14) இடம்பெற்றது காரைதீவு பிரதேச சபையின் 57 ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று முன்தினம் சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அச்சமயம் வழமைக்கு மாறாக , பல்கலைக்கழக மாணவர்களும், உறுப்பினர்களின் மனைவிமார் குழந்தைகள் உட்பட குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். வரலாற்றில் இதுவரை இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றதில்லை. நேற்று(14) இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக விபச்சார விடுதி என்று கூறிய பாராளுமன்ற உறுப்பினருக்கு தவிசாளர் கண்டனம் தெரிவித்து பேசினார். உபதவிசாளர் ஏ.எம்.ஜாகீர், உறுப்பினர்களான இஸ்மாயில் ,பஸ்மீர், நேசராசா ,மோகனதாஸ், ஜெயராணி, சசிக்குமார், குமாரசிறி, றணீஸ் ஆகிய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து ,காரைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபான சாலை அகற்றப்பட வேண்டும் என்ற பிரேரணையில் தமிழ் முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்துக்களை பரிமாறினார்கள். அவரவர் ஆசனங்களிலே புதிதாக பொருத்தப்பட்ட ஒலி வாங்கி மற்றும் பெயர்ப்பலகை சகிதம் உறுப்பினர்கள் அனைவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இறுதியாக, தவிசாளரின் விசேட விருந்துபசாரம் இடம்பெற்றது.

# சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வும், கண்காட்சியும்




**அபு அலா -**

சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் – இலங்கையுடன் இணைந்து திருகோணமலை, கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை ஊடாக நடாத்திய சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வும், கண்காட்சியும் நேற்றும் (14) இன்றும் (15) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அன்டென் அனஸ்ரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் யாழ்ப்பாண அலுவலக துணைத் தூதர் ஸ்ரீ ராக்கேஷ் நட்ராஜ் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரன், விஷேட அதிதிகளாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் மற்றும் திருகோணமலை நகரசபை செயலாளர் வி.ராஜசேகர் உள்ளிட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்த இந்த விழிப்புணர்வுக் கண்காட்சியில் நீரிழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனைகளுடன் மருத்துவ ஆலோசனைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. அத்துடன், நீரிழிவு நோயை எவ்வாறு கட்டுப்படுத்தி சுக வாழ்வுடன் வாழவேண்டும் என்ற ஆலோசனை வழிமுறைகள் பற்றிய தெளிவான விளக்கங்களை வைத்தியர்கள் வழங்கி வைத்து அதுதொடர்பிலான வழிகாட்டி கையேடுகளும் வழங்கி வைக்கப்பட்டது. மேலும், திருகோணமலை கேம்பஸ் உள்ளகப்பயிற்சி வைத்தியர்களினால் யோகாப் பயிற்சி செய்முறைகளும் செய்து காட்டப்பட்டு அதுதொடர்பிலான விளக்களை அதிதிகளுக்கும், பொதுமக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது. பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்ட அதேவேளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அந்த உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




அட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட பன்மூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அதிபர் டி.சன்முகநாதன் தலைமையில் அட்டன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் இடம்பெற்றது.இதன்போது பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.ஆர்.சத்தியேந்திரா , உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லக்ஷ்மி பிரபா ஆகியோர் கலந்துக்கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் பதக்கங்களையும் வழங்கி வைத்தனர். **(தலவாக்கலை பி.கேதீஸ்)**

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# தேசிய ரீதியில் மட்டக்களப்பு மலேரியா நோய் தடுப்பு இயக்கம் சாதனை



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

2022 ம் ஆண்டு தேசிய ரீதியாக சுகாதார அமைச்சுடன் மலேரியா நோய் தடுப்பு இயக்கம் இணைந்து நடாத்திய மலேரியா நோய் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான போட்டியில் மட்டக்களப்பு மலேரியா நோய் தடுப்பு இயக்கம் சாதனை படைத்துள்ளது. மலேரியா தொடர்பான விழிப்புணர்வு போட்டியில் (**Youtube, Facebook**) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட மட்டக்களப்பு மலேரியா தடை இயக்கம் சார்பாக போட்டியிட்ட பட்டிப்பளை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவு லுழரவரடிந எனைநழ பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினையும் மாகாண மட்டத்தில் **Face book** பிரிவில் கிரான் சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவு முதலாம் இடத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளது. நேற்றைய தினம் (14) திகதி நாரஹேன்பிட்டி தேசிய இரத்த மாற்று சேவைகள் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற நிகழ்வின் போது இவர்களுக்கான நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை சிறைச்சாலையில் இரத்தானம்

**எப்.முபாரக்**

திருகோணமலை சிறைச்சாலையும் சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள உதிரம் கொடுத்து உயிரை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளிலான இரத்த தான நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை (19) காலை 9.00 மணியளவில் திருகோணமலை சிறைச்சாலை வளாகத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வு திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டெப் தலைமையில் நடைபெறவுள்ளதோடு திருகோணமலை நகரிலுள்ளோர் தாமாக முன்வந்து இரத்த தானம் வழங்க முடியும். இந்நிகழ்வில் திருகோணமலை சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் லயன்ஸ் பாஸ்கரன்,மற்றும் தயானந்த ஜயவீர ,பிரதான ஜெயிலர் சம்பத் ஜயவர்த்தன,சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

# மரநடுகை நிகழ்வு மாணவர்களின் பங்கேற்புடன் ஆரம்பம்



**ஹஸ்பர்**

திருகோணமலை முள்ளிப்பொத்தானை தி/கிண்/ பாத்திமா பாலிகா மகாவித்தியாலயத்தில் மரநடுகை நிகழ்வு இன்று (15) இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களின் பங்கேற்புடன் மரத்தை பாடசாலை வளாகத்தினுள் நட்டு வைத்தார். குறித்த பாடசாலை மாணவிகளால் அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன் மர நடுகை நிகழ்வு இடம் பெற்றது. இதனை தொடர்ந்து பாடசாலை மைதானத்தினுள்ளும் மரநடுகை இடம் பெற்றது. இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் மஹிந்த வனசிங்க,விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் மற்றும் பாடசாலை பிரதி அதிபர்,ஆசிரியர்கள்,இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கரபந்தாட்டப் போட்டியில் துள்ளுக்குடியிருப்பு கழகம் வெற்றி



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பகுதியில் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை கரபந்தாட்ட விளையாட்டில் ஊக்குவிக்கும் முகமாக ஜேஎஸ்ஏ நிறுவனமானது யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரனையுடன் கரபந்தாட்ட சுற்றுப் போட்டிகளை கடந்த ஓரிரு தினங்களாக முன்னெடுத்தது. சிறுவர் கழகங்களுக்கிடையிலான இவ் போட்டியில் தாராபுரம் . தோட்டவெளி , துள்ளுக்குடியிருப்பு ,கருங்கண்டல் , தலைமன்னார் கிராமம் ,நடுக்குடா , ஓலைத்தொடுவாய் , கீழியன்குடியிருப்பு ஆகிய எட்டுக் கழங்கள் இவ் கரபந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட்டன.

இவ் போட்டியில் இறுதி போட்டியானது துள்ளுகுடியிருப்பு இளந்தளீர் கழகத்துக்கும் மற்றும் தாராபுரம் அல் ஜின்னா சிறுவர் கழகத்துக்குமிடையே ஞாயிற்றுக்கிழமை (13.11.2022) துள்ளுகுடியிருப்பு கரபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது. ஐந்துக்கு மூன்று என்ற வெற்றியை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட இவ் போட்டியில் துள்ளுகுடியிருப்பு இளந்தளீர் கழகம் தாராபுரம் அல் ஜின்னா கழகத்தை 3-2 என்ற புள்ளியில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இவ் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக ரி.ஜெபநேசன் மற்றும் வீ.கோபினாத் ஆகியோர் ஈடுபட்டனர். இவ் போட்டியில் விருந்தினர்களாக மன்னார் யுனிசெவ் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.இருதயநாதன் யுனிசெவ் திட்டமிடல் அலுவலகர் த.அழகேஸ் , சிறுவர் நன்னடத்தை அலுவலகர் ஓஸ்மன் குலாஸ் , மன்னார் மாவட்ட கரபந்தாட்ட சங்கத் தலைவர் ஜி.ஸ்ரீபன் அருட்சகோதரி மேரி சென். மேரிஸ் சிறுவர் பாடசாலை ஆசிரியர் சர்மலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நடுச்சாமத்தில் கன மழை அகதி முகாமுக்குள் வெள்ளம் சிறுக சேர்த்த உடமைகளையும் வெள்ளத்தில் மிதக்க விட்டோம்



**(வாஸ் கூஞ்ஞ)**

திடீரென கள்ளன் உட்புகுவதுபோல் நடுச்சாமத்தில் கன மழை பெய்து நாங்கள் தங்கி வாழும் அகதி முகாமுக்குள் வெள்ளம் உட்புகுந்தமையால் உடமைகளை மட்டுமல்ல எங்கள் பிள்ளைகளின் கல்வி தொடர்பான அனைத்தையும் வெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டோம் என வெள்ளத்தில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் தேவசகாயம் அன்ரனி தாசன் இவ்வாறு தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள மூன்று அகதி முகாம்களிலுள்ள மக்கள் கடந்த 09.11.2022 அன்று முதல் பெய்து வரும் கன மழையின் காரணமாக அங்கு குடியிருக்கும் 57 குடும்பங்களிலுள்ள அதிகமானோர் மிகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகி தாங்கள் சிறுக சிறுக சேர்த்த உடமைகளையும் வெள்ளத்தில் மிதக்க விட்டு இடம்பெயர்ந்து காணப்படுகின்றனர்.

நிலவன் அகதி முகாமில் இருந்து வெள்ளத்தின் காரணமாக தற்பொழுது பொது மண்டபத்தில் தங்கியிருக்கும் தேவசகாயம் அன்ரனி தாசன் தெரிவிக்கையில், நாங்கள் 1990ம் ஆண்டு பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது யாழ்ப்பாணம் பொலிகண்டி ஜே.394 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள அகதி முகாமில் வசித்து வருகின்றோம். முப்பது வருடங்களாக இவ் அகதி முகாமில் இருந்து வரும் நாங்கள் ஒவ்வொரு வருடமும் பருவ மழை காலங்களில் இவ் முகாமில் ஏற்படும் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து கோவில்களிலும் பொது மண்டபங்களிலும் தங்கி வாழும் நிலையே எமக்கு ஏற்பட்டு வருகின்றது.

இவ் வருடம் 09.11.2022 அன்று பெய்த மழையானது நடுச்சாமம் நேரத்தில் கள்ளன் வந்ததுபோன்று எங்களை கவ்விக் கொண்டது. அதாவது பெய்த இவ் மழையால் எங்கள் பகுதிக்குள் நடுச்சாமம் வேளையில் வெள்ளம் ஏற்பட்டது. இதன்போது நாங்கள் எங்கள் உடமைகளை பாதுகாக்க முடியாத நிலையில் எங்கள் பிள்ளைகளின் பாடசாலை புத்தகம் கொப்பிகளையும் எடுத்து வரமுடியாத நிலையில் யாவும் வெள்ளத்தில் மிதக்க தொடங்கி விட்டது.

யாவற்றையும் வெள்ளத்தில் மிதக்கவிட்ட நிலையில் கையில் எடுத்துக் கொண்ட ஒரு சில துணிமணியுடனே நாங்கள் இந்த மண்டபத்துக்குள் தஞ்சம் அடைந்து இருக்கின்றோம். பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவால் சமைத்த உணவு மட்டும் எங்களுக்கு தற்பொழுது கிடைக்கப் பெறுகின்றது. இந்த நிலை எங்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் மனிதாபிமானம் நோக்கி எங்களை எங்கள் சொந்த இடத்தில் மீள் குடியேற்ற வேண்டும் என்றுதான் நாங்கள் கெஞ்சிக் கொண்டு இருக்கின்றோம் என வெள்ளத்தில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் தேவசகாயம் அன்ரனி தாசன் இவ்வாறு தெரிவித்தார்.

# ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த இரு சந்தேக நபர்கள் கைது



**(பாறுக் சிஹான்)**

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்த இரு சந்தேக நபர்கள் தொடர்பில் கல்முனை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை(13) இரவு மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாழைச்சேனை நகரப்பகுதியில் வைத்து இரு சந்தேக நபர்களும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதாகினர்.

இவ்வாறு கைதான நபர்கள் இருவரும் ஓட்டமாவடி பகுதியை சேர்ந்த 51 மற்றும் 36 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் சந்தேக நபர்கள் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள்கள் முறையே 5 கிராம் 140 மில்லிகிராம் மற்றும் 9 கிராம் 340 மில்லி கிராம் உட்பட மோட்டார் சைக்கிள் ஒன்றும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க பொலிஸ் சார்ஜன்ட் பண்டார (13443) உள்ளிட்ட பொலிஸ் கன்டபிள்களான பியுமஹ (94143) ஜயவர்த்தன (94155) நிமேஸ் (90699) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபர்களை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்களுடன் வாழைச்சேனை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232. 075 2331738
supeedsam@gmail.com

